பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஐப்பசி 17 (2—11—68) சனி ★ வெளியூர்: ஐப்பசி 18 (3—11—68) ஞாயிறு [இதழ்: 114

கூட்டணி பெற்ற வெற்றி சரிவுக்கு அடையாளமா?

1952-ல் காங்கிரசின் கதை என்ன?

முக்கால் கிணறு தாண்டியவரின் 'இத்தாப்பு'!

சுடச்சுடப் பதில் தருகிறார் பொதுப்பணி அமைச்சர் கருணாநிதி

சென்னை, நவ. 2—

திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு இப்போது ஏதோ சரிவு ஏற்பட்டிருப்பதுபோலவும், காங்கிரசுக் கட்சிக்கு ஆதரவு பெருகியிருப்பதுபோலவும் பேசியுள்ள தமிழ்நாடு காங்கிரசுக் கட்சித் தலைவர் சுப்பிரமணியத்துக்குச் சுடச்சுடப் பதிலளித்திருக்கிறார் அமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள்.

மாநகராட்சி மன்றத் தேர்தல் முடிவை வைத்துக்கொண்டு தப்புக் கணக்குப் போடும் சுப்பிரமணியத்துக்குப் பழைய காங்கிரசுக் கட்சி வரலாற்றையும் நினைவுபடுத்தியிருக்கிறார் அவர்.

திருவொற்றியூர்–காலடிப்பேட்டையில் நேற்று நடைபெற்ற பொற்செழியன் நினைவு மன்றத் துவக்க விழாவில் திரு. கருணாநிதி அவர்கள் கலந்துகொண்டு பேசுகையில், திரு. சுப்பிரமணியத்துக்குப் பதிலளிக்கும் வகையில் கூறியதாவது:—

"1949-ம் ஆண்டு தி. மு. கழகம் துவக்கப்பட்ட காலத்தில் எண்ணூறு கழகக் கிளைகளே இருந்தன! அது ஆயிரமாகி இரண்டாயிரமாகி இன்று பதினோராயிரம் கிளைகளாக வளர்ந்திருக்கின்றன.

இருந்தாலும் சுப்பிரமணியம், 'தி. மு. கழகம் சரிந்துவிட்டது' என்று பேசி வருகிறார்; பரபரப்பான அறிக்கைகளை விடுகிறார்.

சென்னை மாநகராட்சித் தேர்தலைக் குறிப்பிட்டுக் காட்டிப் பேசுகிறார் அவர்.

1958-ஆம் ஆண்டு காங்கிரசு ஆதிக்கத்தில் சென்னை மாநகராட்சி இருந்துவந்தது. இன்னும் சரியாகச் சொல்ல வேண்டுமானால் காங்கிரசுக் சனதனவான்களின் ஆதிக்கத்தில் மாநகராட்சி இருந்துவந்தது.

அப்போது நமது கழகத்தின் சார்பில் அ. பொ. அரசும், முனுசாமியும்தான் அங்கம் வகித்துவந்தார்கள்.

இரண்டு பேர் இருந்த இடத்தில் இப்போது 68 பேர் இருப்பதுதான் சரிவா? என்று அவரைக் கேட்கிறேன்.

சுப்பிரமணியம் சுட்டிக் காட்டியிருக்கிறார்—பொதுத் தேர்தலிலும்—இடைத் தேர்தல்களிலும் தி. மு. கழகம் பெற்ற வாக்குகளைவிட இந்த மாநகராட்சித் தேர்தலில் குறைவான வாக்குகளைப் பெற்றிருக்கிறது; காங்கிரசு அதிகமான வாக்குகளை இந்தத் தேர்தலில் பெற்றிருக்கிறது'—என்று!

சரி; அந்த வாக்கு வித்தியாசத்தால் தி. மு. கழகத்தைத் தோற்கடித்து விட்டதாக அவர்களால் கூறமுடியுமா? முடியாது. ஆனால், 'முக்கால் கிணற்றைத் தாண்டியிருக்கிறேன்' என்றுதான் கூறமுடியும்.

இப்படிப்பட்ட வெற்றிப் பெருமிதத்தை சுப்பிரமணியம் இங்கு மட்டும் கூறவில்லை; டில்லிக்கு அவசர அவசரமாகச் சென்று இந்திரா காந்தியிடம் 'காமராசர் கோட்டைவிட்ட மாநகராட்சியை நான் பிடித்துவிட்டேன்' என்று கூறியிருக்கிறார்.

அதற்கு அந்த அம்மையாரும், 'அப்படியானால் யாரை நம் கட்சியில், மேயராக்கப் போகிறீர்கள்? என்று கேட்டிருக்கலாம்.

அதற்கு இவர், 'மேயராக்குகிற அளவுக்குப் போகவில்லை; முக்கால் கிணறுதான் தாண்டியிருக்கிறோம்' என்றுதான் கூறியிருக்க முடியும்.

இப்படி முக்கால் கிணறு தாண்டிவிட்டு, ஆகா! வெற்றி பெற்றுவிட்டோம்; அவர்கள் வீழ்ந்துவிட்டார்கள் என்பதில் என்ன பொருள் இருக்க முடியும்?

தோழமைக் கட்சிகளுடன்கூட்டுச் சேர்ந்து மாநகராட்சியை நிர்வகிக்கும் நிலைக்குத் தி மு கழகம் வந்திருப்பது, 'தி.மு.க வீழ்ச்சிக்கு அடையாளம்' என்று கூறுகிறார் சுப்பிரமணியம்!

அவருக்கு அவரது கட்சியின் வரலாற்றைக் கொஞ்சம் நினைவுபடுத்துகிறேன்.

1937-ம் ஆண்டு தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சி படுதோல்வி அடைந்தது: பொப்பிலி அரசர் போன்ற ஜஸ்டிஸ் கட்சியின் பெருந்தலைகள் எல்லாம் உருண்டன.

அப்போது நான் திருவாரூர் பள்ளியில் முதலாம் படிவம் படித்துக் கொண்டிருந்தேன்; அங்கு காங்கிரசுக்காரர்கள் நடத்திய வெற்றி விழா ஊர்வலத்தில் 'பொப்பிலியின் ஆட்சி அப்பளமாயிற்று' என்று குரல் கொடுத்தார்கள்; அப்போது அவர்கள் மிகப் பெரிய கட்சியாகத்தான் இருந்தார்கள்.

1947-ம் ஆண்டு இந்தியா சுதந்தரமடைந்தது; முதல் பொதுத் தேர்தல் 1952-ம் ஆண்டில் நடைபெற்றது.

சுதந்தரத்திற்காகப் பாடுபட்டவர்கள் என்ற முழக்கத்தை முன்வைத்து காங்கிரசு தேர்தலில் ஈடுபட்டது.

பிரிக்கப்படாத சென்னை இராஜ்யத்தில் 1952-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் காங்கிரசுக் கட்சிக்கு நேர்ந்த கதி என்ன?

தனிப் பெரும்பான்மைக் காங்கிரசு பெறமுடியாத அளவுக்கு இருந்தது.

காங்கிரசு தனிப்பட்ட முறையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்க முடியாது என்ற நிலை ஏற்பட்டது—இராஜாஜியிடம் ஓடோடிச் சென்றார்கள்!

எந்த இராஜாஜியை அரசியலிலிருந்து விரட்டியடிக்கக் காமராசர் கோஷ்டி முயன்றதோ—அந்த இராஜாஜியிடமே அந்தக் காமராசர் கோஷ்டி சரண் புகுந்தது.

அவர்—உழைப்பாளர் கட்சியையும்—காமன் வீல் கட்சியையும் சேர்த்துக் கொண்டு அமைச்சரவை அமைத்தார். உழைப்பாளர் கட்சித் தலைவர் எஸ். எஸ். இராமசாமி படையாச்சிக்கும் காமன்வீல் கட்சித் தலைவர் மாணிக்கவேலருக்கும் அமைச்சுப் பதவிகள் அளிக்கப்பட்டன.

பிற கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்துதான் அன்றைய தினம் காங்கிரசு அமைச்சரவை அமைத்தது.

கூட்டுச் சேர்ந்து நிர்வாகத்தில் பங்கேற்பது சரிவுக்கான ஆரம்பம் என்றால் அன்று காங்கிரசுக்குச் சரிவு ஆரம்பம் ஆயிற்று என்று பொருள்?

ஆனால் உள்ளபடியே காங்கிரசுக்கு அன்று சரிவு ஏற்படவில்லை. அதற்கடுத்த 1957-ம் ஆண்டுத் தேர்தலிலும் 1962-ம் ஆண்டுத் தேர்தலிலும் தனிப் பெரும்பான்மைக் கட்சியாக வளர்ந்தது.

இந்தப் பழைய வரலாற்றை மறந்துவிட்டு தோழமைக் கட்சிகளுடன் சேருவதே சரிவுக்கு ஆரம்பம் என்கிறார் சுப்பிரமணியம்.

பிற கட்சிகளுடன் சேர்ந்து அமைச்சரவை அமைத்த அவர்களுக்கே சரிவு இல்லை என்றால்—பரம பாதக ஆட்சி புரிந்த அவர்களுக்கே 15 ஆண்டுக்காலம் வரை சரிவு ஏற்படவில்லை என்றால்—ஏழைமக்களுக்காக படியரிசித் திட்டமும்—ஏழை விவசாயிகளுக்காகப் புன்செய் வரி ரத்தும் — 'தமிழ் நாடு' பெயர் மாற்றமும்—ஆதிக்க இந்தியை ஒழிக்க தீர்மானமும்—ஏழை மாணவர்களுக்கு இலவசப் படிப்பும் ஏற்படுத்திய தி. மு. கழக ஆட்சிக்கா சரிவு ஏற்படும்?

மாநகராட்சித் தேர்தல் நிச்சயமாக தி. மு. கழகத்திற்குச் சரிவு இல்லை!

'ஐயோ' என்று சொல்கிற அளவுக்கு எதுவும் நடந்துவிடவில்லை!

தி.மு. கழகம் மென்மேலும் மக்கள் பணியாற்றத் தன்னைத் தயார் படுத்திக்கொள்ள உதவும் ஓர் அறைகூவலாக மாநகராட்சித் தேர்தலை அது கருதியது; அந்த அறைகூவலை ஏற்று வெற்றியும் பெற்றது.

தி. மு. கழகம் போட்டியிட்ட இடங்கள் 96. இதில் வெற்றி பெற்ற இடங்கள் 54.

பாதிக்கும் குறைவாக, 48 இடத்திற்கும் குறைவாக நாங்கள் பெற்றிருந்தால் தோல்வியடைந்துவிட்டோம் என்று பொருள். ஆனால் 54 இடங்களைப் பெற்றோம்.

எங்களோடு மோதி காங்கிரசு தோல்வி அடைந்தது. எங்களுடைய தோழமைக் கட்சிகளுடன் போட்டியிட்டாவது வெற்றிபெற்றார்களா?

தோழமைக் கட்சிகள் போட்டியிட்ட இடங்கள் 24; அவற்றில் அந்தக் கட்சிகள் வெற்றிபெற்ற இடம் 14. ஆகவே தோழமைக் கட்சிகளுடன் போட்டியிட்டும் தோற்றார்கள்!

இவ்விதம் எங்களுடன் போட்டியிட்டு ஒரு தோல்வி; தோழமைக் கட்சிகளுடன் போட்டியிட்டு இன்னொரு தோல்வி!

ஆக இரண்டு தோல்விகளை மாநகராட்சித் தேர்தலில் பெற்ற காங்கிரசார் எங்களைப் பார்த்தா தோல்வியடைந்த கட்சி என்று கூறுவது?"

'சீ, சீ இந்தப் பழம் புளிக்கும்!'

'சென்னை மாநகராட்சித் தேர்தலில் தி. மு. கழகம் செய்ததைப்போல காங்கிரசுக் கட்சியும் ஒத்த கருத்துடைய கட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்து இன்னும் அதிகமான இடங்களைக் கைப்பற்றியிருக்க முடியும். ஆனால் இத்தகைய முறைகளின் மூலம் ஆளுங் கட்சி ஆவதைவிட, இப்போதைய சூழ்நிலையில் இன்னும் சிறிது காலத்துக்கு எதிர்க் கட்சியாக இருப்பதே காங்கிரசுக் கட்சிக்கு நன்மை அளிப்பதாகும் என்று கருதுகிறேன்"

என்று, தமிழ்நாடு காங்கிரசுக் கட்சித் தலைவர் சி. சுப்பிரமணியம் செய்தியாளர்களிடம் தெரிவித்தாராம்!

காங்கிரசுக் கட்சிக் கூட்டுச் சேர விரும்பவில்லை என்பது ஒருபுறமிருக்கட்டும்; அப்படி விரும்பினால்தான் சேருவதற்கு எந்தக் கட்சி இருக்கிறது? தமிழ்நாட்டில் உள்ள கட்சிகளெல்லாமே தி. மு. கழகத்துடன் ஓரணியில் திரண்டு நின்றுவிட்டபிறகு, சுப்பிரமணியம் யாருடன் போய்க் கூட்டுச் சேருவார்?

அவர்கள் கட்சிக்குள்ளே இருக்கும் இரண்டு கோஷ்டிகளுமே ஒன்று சேர்ந்து இயங்க முடியவில்லை என்றால் வேறு ஒரு கட்சியுடனா அவர்கள் சேர முடியும்?

பாவம்! தாவித் தாவிப் பார்த்து எட்டாத காரணத்தால் கொட்டாவிவிட்டு 'சீ, சீ-இந்தப் பழம் புளிக்கும்' என்று ஏமாந்து திரும்பிய நரியின் கதைதான் நினைவுக்கு வருகிறது!

வாழ்க்கையின் பிரதிபலிப்பு!

"அரசியல் வாழ்க்கை, சொந்த வாழ்க்கையின் பிரதிபலிப்பாக இருக்கவேண்டும்; இவை இரண்டும் தனித்தனியே பிரிந்திருக்க முடியாது."

—காந்தியார்

தொழில் வளர்ச்சியில் டில்லியின் ஓரவஞ்சனை

ஆந்திர முதலமைச்சரும் மனங் குமுறுகிறார்

ஐதராபாத், நவ. 1—

"தொழில் வளர்ச்சி சம்பந்தமாக மாநிலங்களுக்கிடையேயுள்ள ஏற்றத்தாழ்வுகள் குறித்த மனக்குறையை மத்திய அரசு அலட்சியப்படுத்துமேயானால் தேசிய ஒருமைப்பாடு குலைந்துபோகும்"

என்று ஆந்திர மாநில முதலமைச்சர் கே. பிரம்மானந்த ரெட்டி எச்சரித்துள்ளார்.

இங்கு நாலரைக்கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட ஒரு தொழிற்சாலையைத் திறந்துவைத்துப் பேசுகையிலேயே மேற்கண்டவாறு ஆந்திர முதலமைச்சர் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:—

"இதுபோன்ற ஏற்றத்தாழ்வுகளால் ஏற்படும் பிரச்சினைகளின் தன்மையை மத்திய அரசு உணரும்வரை நான் தொடர்ந்து இது குறித்து வற்புறுத்தி வருவேன்.

"ஆந்திர மாநிலம் முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களின் போதும் புறக்கணிக்கப்பட்டுத் தாழ்ந்துவிட்டது. இக்குறைபாடு ஓரளவுக்காவது நான்காவது திட்ட காலத்தில் தீர்க்கப்பட வேண்டும். ஆந்திரத்தில் கடந்த காலத்தில் நடைபெற்று வந்த சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற அனுமதிக்க முடியாத ஒரு நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது.

"உணர்ச்சி வயப்பட்ட பிரச்சினைகள் விரைவில் மறைந்துபோகும். ஆனால் பொருளாதாரப் பிரச்சினை குறித்த மனக்குறை மட்டும் ஆண்டு பல ஆனாலும் நீடித்து நிற்கும்.

"எனவே பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்குச் சற்று நம்பிக்கை ஏற்படும்படியாக மத்திய அரசு நடந்துகொள்ள வேண்டும்.

"சிறிய கார் தொழிற்சாலையை ஆந்திரத்தில் ஏற்படுத்தித் தர வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்."

நம்நாடு

ஆசிரியர்: இரா.செழியன் எம்.ஏ. எம்.பி.

திருவள்ளுவராண்டு 1999 ஐப்பசி 17 (2—11—68) சனி

இந்தி வெறியின் பயங்கரம்!

இந்தி ஆதிக்க வெறியின் பிறப்பிடம் உத்தரப் பிரதேசம். 'இந்தியா சிதறுண்டு சிறுசிறு துண்டுகளாகப் போனாலும் பரவா யில்லை; இந்தி மொழிக்கு ஆதிக்கம் ஏற்பட்டால் போதும் -- அதுவே விரும்பி வரவேற்கத்தக்கது' என முடிவு கட்டிக்கொண்டிருப்பது போலவே, உத்தரப் பிரதேச இந்தி வெறியர்கள், இந்திக்கு ஆதிக்கம் தேடிட முனைந்திருக்கின்றனர்.

உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் யாராக இருந்திட்டாலும், அவர்கள் எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்திட்டாலும், அவர்கள் அனைவரும், இந்தி மொழி வெறியர்களாகவும், அம்மொழியின் ஆதிக்கத்துக்கு அரும் பாடுபடுகிறவர்களாகவுந்தான் உள்ளனர். தங்களுக்குள்ளாக வெளிப்படுத்திக்கொள்ளுகின்ற அரசியல் கண்ணோட்டத்திலும் இலட்சியத்திலும் எத்தகைய முரண்பாடுகள் இருந்திட்டபோதிலும், அவர்கள் அனைவரும் கட்சி வேற்றுமையையும் இலட்சிய மாறுபாட்டையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு, இந்திக்கு முடிசூட்டிவைப்பதில் மட்டும் எந்த மனத்தினராகவும் ஒத்துச் செயல்படுகின்றவர்களாகவும் உள்ளனர்.

உண்மையான சனநாயக முறையைச் சீர்கெடுக்கின்றவராக இருந்திட்டாலும், சர்வாதிகார ஆட்சியை விரும்புகிறவராக இருந்திட்டாலும், சமதர்மக் கோட்பாட்டைச் செயல்படுத்த முனைந்துள்ளவராக இருந்திட்டாலும், அக்கோட்பாட்டை முழுமூச்சாக எதிர்த்து முதலாளித்துவத்துக்கு வெண்சாமரம் வீசிக்கொண்டிருப்பவராக இருந்திட்டாலும், உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகள் அனைவரும், இந்தி மொழியை அரியணையில் அமர்த்தும் முயற்சியில் ஒருமித்த கருத்துக் கொண்டவர்களாக உள்ளனர் என்பதுடன், தங்களுக்குள் போட்டியிட்டுக்கொண்டு அதற்காகத் தீவிர முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருப்பவர்களாகவும் உள்ளனர்.

இந்தி ஆதிக்கத்துக்கு ஏற்பாடு செய்வதில், உத்தரப் பிரதேச அரசியல்வாதிகள் மட்டுந்தான் இப்படி ஒருமித்தக் கருத்துக் கொண்டு, விறுவிறுப்பாக முயற்சித்து வருகின்றனர் என்பதில்லை. உத்தரப் பிரதேசத்தில் கல்வித் துறையில் -- அதிலும் பல்கலைக் கழகம் போன்ற உயர்நிலைக் கல்வித் துறையில் ஈடுபாடு கொண்டிருப்பவர்களும்கூட, இந்திக்கு ஆதிக்கம் தேடும் பணியில், தங்களை முழு அளவில் ஒப்படைத்துக் கொண்டிருக்கின்றனர்.

உத்தரப் பிரதேசத்தில் லக்னோ பல்கலைக் கழகத்தில், 1971-ம் ஆண்டு பட்டப் படிப்புக்களான பி.ஏ., பி.எஸ்சி., பி.காம்., வகுப்புக்கள் இந்தி மொழியில மட்டுமே நடக்கும் என்று அப்பல்கலைக் கழகப் பொறுப்பாளிகள் தீர்மானித்துவிட்டனர். இதைத் தொடர்ந்து, உத்தரப் பிரதேசத்திலும், பீகாரிலும், இராஜஸ்தானிலும், அரியானாவிலும், மத்தியப் பிரதேசத்திலும் உள்ள பல்கலைக் கழகங்கள் ஒன்றன்பின் ஒன்ருக, இந்தியில் மட்டுந்தான் பட்டப் படிப்பு என அறிவித்திடும் தீய நாளை, இனி எதிர்பார்க்கலாம்.

லக்னோ பல்கலைக் கழக முடிவைக் கேட்டதும், ஆங்கிலோ -- இந்திய மக்களின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினரும், ஆங்கில மொழிக்காக வாதாடிக்கொண்டிருப்பவருமான பிராங்க் அந்தோணி அவர்கள், இந்தி வெறியர்களின் முடிவைக் கண்டித்திருக்கின்ருர். குசராத் பல்கலைக் கழகத்தின் முடிவுக்கு எதிராக டில்லித் தலைமை நீதிமன்றம் கொடுத்திருந்த தெளிவான திட்டவட்டமான தீர்ப்பை, தமது எதிர்ப்புக்கும் கண்டனத்துச்கும் சான்ருக அவர் சுட்டிக்காட்டி இருக்கின்ருர்.

சில ஆண்டுகளுக்கு முன்னர், ஆங்கில மொழியை நீக்கிவிட்டு குசராத் மொழியில் மட்டுந்தான் பட்டப் படிப்பு என, குசராத் பல்கலைக் கழகம் தீர்மானித்தது. பல்கலைக் கழகத்தின் இம்முடிவை எதிர்த்து டெல்லி தலைமை நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. அவ்வழக்கில், ஆங்கிலத்தை நீக்கிவிட்டு வட்டார மொழியை மட்டுமே பாட மொழியாகச் செய்யும் உரிமை இல்லை என்றும், ஆங்கிலத்தை அடியோடு அகற்றுவதற்குப் பல்கலைக் கழகங்களுக்கு அதிகாரம் கிடையாது என்றும், தலைமை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அத்தீர்ப்பைச் சுட்டிக்காட்டி, 'இந்தி மட்டுமே பாட மொழியாகும் என லக்னோ பல்கலைக் கழகம் செய்திருக்கின்ற முடிவு நீதிமன்றத்தை முழு அளவில் அவமதிப்பதாக இருக்கிறது' என பிராங்க் அந்தோணி தமது கண்டனத்தின் தொடர்பாக அறிவித்திருக்கின்ருர்.

உத்தரப் பிரதேசத்தில் மொத்தத்தில் 70,000 பிள்ளைகள் ஆங்கிலத்தைப் பாட மொழியாகக் கொண்டு படித்து வருகின்றனர். அவர்களில், ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சம் 2,000 மாணவர்களாவது, கல்லூரிப் படிப்பை நாடுபவர்களாக இருந்திடுவர். அவர்களுடைய மேற்படிப்புக்கு வழி என்ன—என்று பிராங்க் அந்தோணி குமுறி உள்ளார்.

லக்னோ பல்கலைக் கழகத்தின் முடிவு, தலைமை நீதிமன்றத்தின் தீர்ப்பை அலட்சியப்படுத்தி அவமதிப்பதாக இருக்கிறது என்பது ஒருபக்கம் இருக்கட்டும். தலைமை அமைச்சரான இந்திரா காந்தி அவர்களை உறுப்பினராகக் கொண்ட சம்பூரணனந்தரின் ஒருமைப்பாட்டுக் குழு, இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஆங்கில மொழி புரிந்திருக்கின்ற உதவியையும், அம்மொழியின் இன்றியமையாமையையும் அழுத்தம் திருத்தமாகக் கோடிட்டுக் காட்டியுள்ளது. ஆனல், லக்னோ பல்கலைக் கழகமோ, 1971-ம் ஆண்டு முதற்கொண்டு பட்டப் படிப்புக்கு இந்தி மொழி மட்டுந்தான் பாட மொழியாகும் என முடிவு கட்டியுள்ளது.

1971-ம் ஆண்டு முதற்கொண்டு இந்தி மொழி மட்டுந்தான் பட்டப் படிப்புக்கான பாட மொழி எனத் தீர்மானித்திருப்பதை, குசராத் வழக்கில் தலைமை நீதிமன்றம் தந்திருக்கின்ற தீர்ப்பைச் சுட்டிக்காட்டி, பிராங்க் அந்தோணி அவர்கள் கண்டித்திருக்கின்ருர். அவர் எழுப்பிய கண்டனக் குரலொலியின் எதிரொலி ஒடுங்குவதற்குள்ளாக, டில்லிப் பேரரசின் துணைக் கல்வி அமைச்சரான பகவத் ஜா ஆசாத் என்ற கடைந்தெடுத்த இந்தி வெறியர், ஆசிரியர்கள் எதிர்த்தாலும் சரி, அரசியல்வாதிகள் எதிர்த்தாலும் சரி, எதிர்ப்பவர்கள் எவராக இருந்திட்டாலும் சரி, அவற்றைப் பொருட்படுத்தாமல் 1973-க்குள் பல்கலைக் கழக மட்டத்தில் ஆங்கிலத்துக்குப் பதில் இந்தியை மட்டுமே பாட மொழியாக ஆக்க மத்திய அரசு உறுதி செய்திருப்பதாக அறிவித்திருக்கின்ருர்.

"ஆசிரியர்கள், அரசியல்வாதிகள் ஆகியவர்களின் எதிர்ப்பைப் புறக்கணித்து -- இந்தி பேசும் மாநிலங்களில் -- 1973-க்குள் வேளாண்மை, சட்டம், பொறியியல் உட்பட பல்கலைக்கழக மட்டத்தில் எல்லாக் கல்லூரிகளிலும் ஆங்கிலத்திற்குப் பதில் இந்தியைப் பாடமொழியாக்கும் முடிவை நிறைவேற்ற மத்திய அரசு உறுதி கொண்டிருக்கிறது."

இதுதான் பகவத் ஜா ஆசாத் என்கிற முதல்தர இந்தி வெறியரான இந்திய அரசின் துணைக் கல்வி அமைச்சர் அறிவித்திருப்பது.

திரிகுண சென் அவர்கள்தான், 'காபினட்' அந்தஸ்துள்ள பேரரசின் கல்வி அமைச்சர். ஆனல், பேரரசின் கல்வித் துறையில் அவரையும் ஆட்டிப்படைக்கும் அரசியல் வல்லமை பெற்றிருப்பவர் துணைக் கல்வி அமைச்சரான இந்த பகவத் ஜா ஆசாத் அவர்கள்தான். இந்தி வெறியின் தன்மையை இவர் கூற்றிலிருந்து புரிந்துகொள்ளலாம்.

—கா. க.

சென்னை மாநகராட்சியின் சீரிய பணிகள்

உலக சுகாதார நிறுவனத்தின் பாராட்டையும் பெற்றுள்ளன

ஆண்டு விழாவில் ஆளுநர் உஜ்ஜல் சிங் உரை

சென்னை, நவ. 1—

"நகர மக்களுக்கு மேலும் பல வசதிகளைச் செய்தளிக்கத் துடிக்கும் இம்மாநகராட்சியினர் தங்களுக்கு நிதி போதவில்லையே அதை எப்படித் திரட்டலாம்' என்றெல்லாம் கவலை கொள்வது தெரிகிறது

"இவர்களது மானியக் கோரிக்கைகளை மாநில அரசு தன் சக்திக்கேற்பத் தந்துதவும் என்று நம்புகிறேன்.

அதே சமயத்தில் விரயத்தைத் தவிர்த்தல் முன்கூட்டியே திட்டமிட்டுச் செயலாற்றுதல் ஆகியவற்ருல் கணிசமான தொகையை மீதப்படுத்த இயலும் என்றும் நான் நம்புகிறேன்"

என, தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல்சிங், நேற்று, சென்னை மாநகராட்சி ஆண்டு விழாவினைத் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:—

"நாட்டின் மிகப் பெரிய தலைவர்களெல்லாம் இம்மாதிரி உள்ளாட்சி அமைப்புகளிலேயே பயிற்சி பெற்று வந்துள்ளதைக் காணுகிருேம். எனவே மாநகராட்சியைப் பயிற்சிக் களமாகக் கருதிடவேண்டும்.

மக்கள் நலப்பணி ஒன்றே இத்தகைய உள்ளாட்சி அமைப்புகளின் தலையாய நோக்கம். இதில் உறுதியோடும் வலிவோடும் உறுப்பினர்கள் ஈடுபாடு கொள்வதானது நாட்டின் சனநாயக அமைப்பு முறையை மேலும் வலிவுள்ளதாக ஆக்கும்.

வட்டங்களையும் அவரவர் வீதிகளையும் துப்புரவாக வைத்துக்கொள்வதில் பொதுமக்களும் மாநகராட்சி உறுப்பினர்களும் ஒத்துழைத்திட வேண்டும்.

எனக்குப் பெரிதும் துயரத்தை அளிப்பது இந்த நகரத்தின் குடிசைப் பகுதிகள்தான். மாநகராட்சியினர் அவற்றைச் சீர்திருத்தப் புகும்போது அவற்றில் வாழுகின்றவர்களிடமிருந்து வருகிற எதிர்ப்பையும் நானறிவேன்.

குடிசைவாசிகளுக்கு நிலைமையை விளக்கி அவர்கள் உணரும்படிச் செய்தாக வேண்டும்.

மெரீனு போன்ற அழகிய கடற்கரைப் பகுதிகளிலேயே புதிய குடிசைப் பகுதிகள் தோன்றுவதைக் காணுகிருேம்.

இத்தகையவற்றினிடம் மாநகராட்சி சற்றுக் கடுமையாகவே தனது விதிமுறைகளைச் செயல்படுத்த வேண்டுமென்று நான் கருதுகிறேன்.

இந்தக் காரியத்தில் டில்லி மாநகராட்சி ஆற்றியுள்ள நல்ல பணியைச் சென்னை மாநகராட்சி பின்பற்றலாம்.

மக்களுக்கு மருத்துவ உதவி அளிப்பதில் சென்னை மாநகராட்சி நகரின் பல வட்டங்களில் மருந்தகங்களை நடத்தி வருவதைப் பாராட்டவேண்டும். உலக சுகாதார நிறுவனத்தார் மாநகராட்சியின் இப்பணியைப் பாராட்டியிருக்கிருர்கள்.

இந்த நகரின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வீராணத்திலிருந்து காவிரியாற்றுத் தண்ணீரைக் கொண்டுவரும் முயற்சி துவங்க இருப்பதறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இதேபோல நகரின் பாதாளச் சாக்கடைத் திட்ட வளர்ச்சிக்கென்று நகரை ஐந்து பிரிவுகளாகப் பிரித்துச் செயல்பட கவனம் செலுத்தப்பட்டுள்ளதை அறிந்திருக்கிறேன். கூவம் ஆற்றின் சீரமைப்புக்கு ரூபாய் மூன்று கோடி ஒதுக்கப்பட்டுள்ளதையும் நானறிவேன்.

சென்னையின் புதிய மேயர்

நவ. 12-ம் நாள் தேர்ந்தெடுக்கப்படுவார்

அமைச்சர் முத்துசாமி தகவல்

சென்னை, நவ. 1—

"சென்னை மாநகராட்சியின் மேயர் தேர்தல் இத்திங்கள் 12-ம் நாள் நடைபெறும்" என்ற தகவலை உள்ளாட்சித் துறை அமைச்சர் முத்துசாமி இன்று தெரிவித்தார்.

அன்று மாநகராட்சி ஆணையர் முதலில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கட்கு பதவிப் பிரமாணம் செய்து வைப்பார். பிறகு, மேயர் தேர்தலை நடத்துவதற்கு ஒரு தற்காலிக தலைவரை அவர்கள் தேர்ந்தெடுப்பர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர் பிறகு துணை மேயரைத் தேர்ந்தெடுப்பார்.

இணை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஆதித்திராவிட உறுப்பினர்களின் தேர்தல் பிறகு நிர்ணயிக்கப்படும் ஒரு நாளில் நடைபெறும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

தற்போதைய மாநகராட்சி மேயர், உறுப்பினர்களின் பதவிக் காலம் நேற்று பகல் 12 மணியுடன் முடிவடைந்தது.

'புது நியமனம் கூடாது'

நகராட்சிகளுக்கு அரசு உத்தரவு

திருச்சி, நவ. 1—

"நகராட்சிகள் இனிமேல் எந்தப் பதவிக்கும் புதிதாக நியமனங்கள் செய்யக்கூடாது" என்று தமிழக அரசு தடை விதித்துள்ளது.

ஆனல் தனிப்பட்ட முறையில் சில நியமனங்கள் செய்யவேண்டிய அவசியம் இருக்குமானல், அவைகளை அரசின் முன் அனுமதி பெற்று செய்யலாம் என்றும் அரசு தெரிவித்துள்ளது.

நகராட்சிகளின் தேவைகளுக்குக் கூடுதலாகவே ஊழியர்கள் இருக்கின்றனர் என்று நகராட்சிகள் இன்ஸ்பெக்டர் தெரிவித்த கருத்தையொட்டியே இத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

அரசு அனுப்பிய சுற்றறிக்கையொன்றில் இது கூறப்பட்டுள்ளது.

"சுகாதாரப் பிரிவு உட்பட எந்தப் பிரிவுக்கும் நகராட்சிகள் இனிமேல் அரசு அனுமதியின்றி நியமனங்கள் செய்யக்கூடாது.

"கூடுதலாக மேற்கொள்ளப்படும் எந்த வேலையையும் தற்பொழுதைய ஊழியர்களைக் கொண்டே செயல்படுத்தவேண்டும். தனிப்பட்ட முறையில் நியமனங்கள் தேவையிருந்தால், அதனதன் தகுதிகளைப் பார்த்து அரசு அனுமதியுடனேயே அந் நியமனங்கள் நடைபெற வேண்டும்"

என்று அச்சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தடை ஓர் ஆண்டுக்கு நடைமுறையில் இருக்குமென்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

அரியானா அரசு

வழக்கறிஞர் இராஜிநாமா

மாநிலத்தில் புதிய அரசியல் நெருக்கடி

சண்டிகார், நவ. 1—

அரியானா அரசு அட்வகேட்-ஜெனரல் ஆனந்த சுவருப் இராஜிநாமா செய்திருக்கிருர்.

இதன் காரணமாக மாநிலத்தில் புதிய ஓர் அரசியல் நெருக்கடி தோன்றியிருப்பதாகக் கூறப்படுகிறது.

"ஓர் அட்வகேட்-ஜெனரலிடம் வைத்திருக்க வேண்டிய நம்பிக்கையை, முதலமைச்சர் தம்மிடம் வைக்கவில்லை" என்று திரு. சுவருப் கருதுவதாகவும் கூறப்படுகிறது.

திருமண வயதை உயர்த்தத் திருத்த மசோதா

குடும்பக் கட்டுப்பாட்டையொட்டி நடவடிக்கை

புதுடில்லி, நவ. 1—

திருமண வயதை உயர்த்தும்பொருட்டு 1928-ம் ஆண்டைய சிறுவர்கள் திருமணத் தடுப்புச் சட்டத்தைத் திருத்தும் பிரச்சினை மத்திய சுகாதார -- குடும்பக் கட்டுப்பாட்டுத் துறையின் ஆய்வில் இருந்து வருகிறது.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்துக்கு உதவுவதற்கு ஆண்களின் திருமண வயதை 21-க்கும், பெண்களின் திருமண வயதை 18-க்கும் உயர்த்துவதுதான் இம்மசோதாவின் நோக்கமாகும்.

இந்தத் திருத்தத்தின்படி 21 வயது ஆகாத ஆண்களும், 18 வயது ஆகாத பெண்களும் 'சிறுவர்'களாகக் கருதப்படுவார்கள்.

18 வயதுக்கு உட்பட்ட ஓர் பெண்ணின் திருமணத்தில் ஈடுபட்டால் மூன்று மாதம் வரை சிறைத் தண்டனையும் -- அபராதமும் விதிக்கப்படலாம்.

அதேபோல் 21-வயதுக்கு உட்பட்ட ஒரு ஆணின் திருமணத்தில் ஈடுபட்டால், 15 நாட்கள் வரை சிறைத் தண்டனையும் -- ரூ. 1000 வரை அபராதமும் விதிக்கப்படலாம்.

இந்தத் திருத்தத்தின்படி மாநில அரசு குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரி ஒருவரை நியமிக்கலாம்; இந்தச் சட்டத்தின் விதிமுறைகளை மீறும் வகையில் நடைபெறும் திருமணங்களை உரிய நடவடிக்கைகள் மூலம் தடுப்பதே அவரது பொறுப்பாக இருக்கும்; வழக்குத் தொடருவதற்கான சாட்சியங்களையும் அவர் சேகரிப்பார்.

மாநில அரசு கெசட் அறிக்கை மூலம் இந்த அதிகாரிக்குப் போலீசு அதிகாரியின் அதிகாரங்களையும் வழங்கலாம்.

குழந்தை மணத் தடுப்பு அதிகாரியுடன் அரசாங்கச் சார்பற்ற ஆலோசனைக் குழு ஒன்றும் பணியாற்றுமாறு மாநில அரசு ஏற்பாடு செய்யலாம்; இந்தக் குழுவில் பெண்கள் உட்பட ஐந்து சமூக நல ஊழியர்கள் இடம் பெறலாம்.

இந்தத் திருத்தத்தின்படி, குழந்தை மணத் தடுப்பு அதிகாரி எழுத்து மூலம் புகார் தெரிவித்தால்தான் நீதிமன்றம் இந்தச் சட்டத்தின்படி வழக்குப் பதிவு செய்யும்.

புதுமையை கண்டுபிடியுங்கள்

பொறியியலாளர்கட்கு வேண்டுகோள்

சென்னை, அக். 31—

"தற்போது வேலை கிடைக்கப் பெருமல் அவதியுறும் பொறியியலாளர்கள், புதிய கண்டுபிடிப்புகள் எதனையும் பற்றிய தங்களது கருத்துக்களைத் தெரிவிப்பார்களானால் கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதற்கென்று அமைந்துள்ள தேசியக் கழகம், அத்தகையவர்களுக்கு நிதியுதவி அளிக்கும்"

என்று அந்தக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திரு. என். பவானி, செய்தியாளர்களிடம் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"நாட்டின் பொறியியலாளர்களை எதிர்நோக்கியுள்ள சிக்கல் அத்தனைக்கும் தீர்வு காணும் நிலைமையில் இக்கழகம் இல்லை என்றாலும், புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுமானல், அதன் மூலம் மற்றவர்களுக்கும் வேலை கிடைக்கும்.

"பொறியியலாளர்கள் தங்களுடைய கருத்துக்களை இக்கழகத்துக்கு நேரே எழுதலாம்; தாமதமேதுமின்றி, உடனடியாகப் பதில் அளிக்கப்படும்."

தானியங்கள் சேமிப்பில் புதிய முறை

இந்தியாவுக்கு பிரிட்டிஷ் நிபுணர் ஆலோசனை

வேளாண்மை நாடான இந்தியாவில் தானியங்களை—குறிப்பாகக் கோதுமையை—சேகரிப்பதில் புதிய முறைகளைக் கையாளவேண்டிய அவசியம் பற்றி விவசாயிகளுக்கு ஆலோசனை கூறுவதற்காக பிரிட்டிஷ் நிபுணர் ஒருவர் நவம்பர் மத்தியில் இந்தியா வருகிறார். அறுவடையிலிருந்து, தானியங்களை உலர்த்துதல், பின்னர் சேமிப்பு முறை வரை எல்லாத் துறைகளிலும் தேர்ந்த திரு. ஜி. ஜி. கார்பெட் என்ற பிரிட்டிஷ் நிபுணர் இந்தத் துறைகளில் ஆலோசனை கூறுவார்.

பிரிட்டிஷ் வெளிநாடுகள் வளர்ச்சிப் பணி அமைச்சக ஆதரவில் இந்தியா வரும் இந்த நிபுணர் தானியங்களை உலர்த்துவதிலும், சேமித்து வைப்பதிலும் சில புதிய நுணுக்கங்களைத் தெரிந்தவர். குறிப்பாக சேதம் இல்லாமல்—அல்லது குறைந்த சேதத்தில்—இவற்றைச் செய்யும் முறை பற்றி இந்திய விவசாயிகளுக்கு இவர் விளக்குவார்.

நவம்பர் 16-ம் தேதி இவர் லண்டனிலிருந்து புதுடில்லி வருகிறார். இந்தியப் பயணத்திற்குப் பிறகு இவர் தாய்லாந்து செல்கிறார்.

அமெரிக்காவில் வாழும் இந்தியர்கள்

வாஷிங்டன், நவ. 2—

சென்ற சனவரி 1-ம் நாள் எடுத்த ஒரு கணக்குப்படி, அமெரிக்காவில் 9,594 இந்தியர்கள் இருந்தனர். இவர்களில் மாணவர்கள், பயிற்சியாளர்கள், மருத்துவர்கள், அழைப்புக்குரிய அறிஞர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். வாஷிங்டன் நகரிலுள்ள இந்தியத் தூதரகத்தின் கல்வித் துறை இந்தப் புள்ளி விவரங்களைத் திரட்டியுள்ளது.

முந்திய ஆண்டுக்குரிய (1967) புள்ளிவிவரங்களோடு ஒப்பிடுகையில், நடப்பு ஆண்டுக்குரிய (1968) தொகை அதிகம்; முந்திய ஆண்டைக்காட்டிலும் 1,092 இந்தியர்கள் நடப்பு ஆண்டில் அதிகமாக இருந்தனர்.

நடப்பு ஆண்டுக் கணக்கில் 7,398-பேர் தனிப்பட்ட மாணவர்கள்; ஏறத்தாழ 600-பேர் பெண்கள்.

மாணவர்களுக்கு அடுத்தபடியாக ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகம்; இவர்களது தொகை மொத்தம் 1,199.

முசிறியில் கலைக் கல்லூரி

திருச்சி, நவ. 1—

அடுத்த ஜுன் திங்கள் முதல் முசிறியில் அரசினர் கலைக் கல்லூரி துவக்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்காக, மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அமைப்புக் குழு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

பி. எஸ். முத்துச்செல்வன் எம்.எல்.ஏ. இதன் துணைத் தலைவர்.

கன்னடரின் தாய்மொழிப் பற்று?

கருநாடக அரசு 'கன்னட நாள்' (நவ. 1) கொண்டாடிக் கொண்டிருக்கிறது. அதன் தலைவர் நிஜலிங்கப்பா, 'தெற்கு இந்தியை எதிர்க்கவில்லை' என்று வடநாடெங்கும் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார். ஆனல் மாநிலத்தின் தலைநகரிலுள்ள இரயில்வே நிலையமோ பரிதாபமான கதையைக் கூறிக் கொண்டிருக்கிறது.

மிக ஆடம்பரமாகக் கட்டப்பட்டு வரும் பெங்களூர் நகர இரயில் நிலையத்தின் மேலுள்ள 'பெங்களூர் சிடி' என்ற நியோன் பெயர் ஆங்கிலத்தில் மட்டுமே உள்ளது.

இரயில்களில், செல்லுமிடங்களைக் குறிக்கும் பெயர்ப் பலகைகளில் கூட, கன்னடத்தைப் பார்க்க முடிவதில்லை.

"வெளியிலிருந்து வரும் சில இரயில்களில் தமிழிலும், மலையாளத்திலும் உள்ள பெயர்ப் பலகைகள், இந்த மாநிலக் காங்கிரசுக்காரர்களின் கன்னடப் பற்றைப் பார்த்து கேலி செய்வது போல இருக்கிறது" என்று 'டெக்கான் ஹெரால்டு' என்னும் ஆங்கில நாளிதழில் வெளியாகியுள்ள ஒரு வாசகர் கடிதம் சுட்டிக்காட்டியிருக்கிறது.

கட்டாய இந்திக்கு ஏற்பட்டுள்ள கதி!

படிக்காமலே 'பாஸ்' செய்யலாம்

இந்தி 'கட்டாயப் பாட'மாக உள்ள கருநாடக மாநிலத்தில், எஸ் எஸ். எல். சி. பொதுத் தேர்வில், மாணவர்கள் இந்தியில் சுன்னம் வாங்கியிருந்தாலும் வெற்றி பெற்றதாகக் கருதப்படுவார்கள் என்ற அறிவிப்பு ஏற்கனவே வெளியாகியுள்ளது

இப்பொழுது அரசு மேலும் ஒரு அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

இதன்படி, இனிமேல் எட்டு, ஒன்பது வகுப்புகளிலும் மாணவர்கள், மேல் வகுப்பிற்குச் செல்ல இந்தி தவிர்த்த மற்றப் பாடங்களில் நூற்றுக்கு 35 எண்கள் பெற்றிருந்தால் போதும்; இந்தியில் தேர்ச்சி பெறவேண்டும் என்பது கட்டாயமில்லை.

எங்கள் வீட்டுக்காரரும் கச்சேரிக்குப் போகிறார்' என்ற பழமொழியைப் போலவே கருநாடக மாநிலமும் இந்தியைக் கட்டாயமாகக் கற்பிக்கும் நிலை உள்ளது என்பதை வடக்கேயுள்ளவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

கவிஞர் தாகூரின் சிறப்பு

இலண்டனில் புகழ்மாலை

"இந்திய அரசியலிலும் கலாசாரம், கலை, இசை ஆகிய துறைகளிலும் அன்றும், இன்றும் ஒரு நிரந்தர இடம் பெற்று விளங்குகிறார் தாகூர். இந்திய மக்கள் மனதில் நீங்காத நினைவுடன் இருக்கும் அவர், புதிய இந்தியாவின் உயர்ந்த மனிதர்களில் தனி இடம் வகிக்கிறார்" என்று திரு. ஜான் பிரீமன் கூறினார்.

அண்மைக் காலம்வரை இந்தியாவில் பிரிட்டிஷ் தூதராக இருந்து, இப்போது வாஷிங்டனில் தூதராக நியமிக்கப்பட்டிருக்கும் திரு. பிரீமன் இலண்டனில் தாகூர் ஆண்டு விழா சொற்பொழிவில் கலந்துகொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார். இந்தச் சொற்பொழிவிற்கு இலண்டனில் உள்ள 'இந்தியா—பிரிட்டன் மன்றம்' ஏற்பாடு செய்திருந்தது.

"இந்திய கலாசாரத்தையும், பண்பாட்டையும் பெருமளவில் வெளியுலகம் அறியச் செய்த பெருமை தாகூரைச் சேரும். அரசியலுக்கு அப்பாற்பட்ட எந்தத் தனி நபரும் ஆற்றுத சாதனை இது" என்று அவர் மேலும் கூறினார்

பிரிட்டிஷ் அரசியலமைப்பில் மாறுதல்

ஆராயக் குழு நியமிக்கப்படும்

வாக்குரிமை பெறும் வயது குறையும்

இலண்டன், அக். 31—

இப்போதைய பிரிட்டிஷ் அரசியல் அமைப்பை மறு ஆய்வு செய்வதற்கு குழு ஒன்று நியமிக்கப்படும் என்று பிரிட்டிஷ் பேரரசி எலிசபெத் நாடாளுமன்றக் கூட்டுப் பேரவையைத் துவக்கிவைத்துப் பேசுகையில் அறிவித்தார்.

வாக்குரிமைக்கான வயது 18 என்று நிர்ணயிக்கும் வகையில் தேர்தல் சட்டத் திருத்த மசோதா வரும் என்று அவர் அறிவித்தார். வாக்குரிமைத் தகுதி பெறும் வயது இப்போது 21-ஆக இருக்கிறது; இது 18-ஆகக் குறைக்கப்படும்; வாக்கெடுப்பு நேரம் காலை 9 மணி முதல் இரவு 10 மணிவரையில் அதிகரிக்கப்படும். இதற்குரிய நிர்வாக அமைப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டால், வேட்பாளர் மனுவிலும், வாக்குச் சீட்டிலும் கட்சி முத்திரைகளைக் குத்துவதற்கு அனுமதிக்கப்படும்.

வாக்குரிமைக்கான வயது குறைக்கப்படுவதன் மூலம் வாக்காளர் பட்டியலில் மேலும் 30 இலட்சம் பெயர்கள் சேர்க்கப்படும்.

பிரிட்டனில் குடியேறும் காமன்வெல்த் குடிகள் அப்பீல் செய்வதற்குத் தனி ஏற்பாடு வரும் என்றும் அரசி அறிவித்தார்.

புது இளம் வாக்காளர்களின் வாக்குகள் தங்களுக்குத்தான் வரும் என்று டோரி கட்சியினரும், தொழிற் கட்சியினரும் எதிர்பார்க்கிறார்கள்.

ஸ்காட்லாந்து, வேல்ஸ் மக்கள் சுதந்தரக் கோரிக்கையை வெளியிட்டதையடுத்து குழு நியமனம் பற்றிய அறிக்கை வந்தது. பிரிட்டனில் எழுத்து மூலம் அரசியல் சட்டம் இல்லை. நியமிக்கப்படும் குழு அரசு அமைப்பு முறை முழுவதையும் பற்றிப் பரிசீலிக்கும். ஒயிட்ஹாலில் அமைந்துள்ள அரசிடம் எல்லா அதிகாரங்களும் அளவுமீறி குவிந்திருக்கிறதென்ற புகாரையும் விசாரிக்கும்.

ஸ்காட்லாந்தும் வேல்சும், தங்கள்மீது இங்கிலாந்து ஆதிக்கம் செலுத்துவதாக எண்ணுகின்றன. ஸ்காட்டிஷ் தேசியக் கட்சியின் வளர்ச்சி ஸ்காட்லாந்தின் சுதந்திரக் கோரிக்கையின் அறிகுறியாகும். வேல்சில், அரசாங்கத்தை எதிர்த்து வன்செயல்களில் இறங்கினார்கள். தொழிற் கட்சிக்கு ஆரம்பத்திலிருந்தே ஸ்காட்லாந்திலும், வேல்சிலும் ஆதரவு அதிகம். இப்பகுதிகளின் வோட்டுகளைத் தொழிற்கட்சி புறக்கணிக்க முடியாது.

அண்மையில் லிபரல் கட்சி, பிரிட்டனில் கூட்டமைப்பு அரசியல் முறையைக் கொண்டுவர வேண்டும் என்றும், ஸ்காட்லாந்திலும், வேல்சிலும் தேசிய பார்லிமெண்டுகளும், இங்கிலாந்தின் பெரிய மாவட்டங்களில் சட்டமன்றங்களும் அமைக்கவேண்டுமென்றும் கோரியது.

காடுகள் அழிக்கப்படுவதன் அபாயம்

மத்திய அமைச்சர் எச்சரிக்கிறார்

கோவை, நவ. 1—

"இந்தியாவில் காடுகளின் பரப்பு வேகமாகக் குறைந்து வருகிறது. 1960 முதல் 1965 வரையில் ஐந்து ஆண்டுகளில் 3,80,000 ஹெக்டர்களுக்கு மேற்பட்ட பரப்புள்ள காடுகள் அழிக்கப்பட்டுவிட்டன" என்ற தகவலை மத்திய உணவு -- விவசாயத் துணை அமைச்சர் டி. எரிங் கூறினார்.

தென் வட்டார பாரஸ்ட் ரேஞ்சர்கள் கல்லூரியில் பட்டமளிப்பு விழாவில் அவர் பேசினார். அவர் மேலும் கூறியதாவது:—

"1952-ல் காடுகள் சம்பந்தமான தேசியக் கொள்கை வகுக்கப்பட்டது. அதன்படி நாட்டின் மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதி காடுகளாக இருக்க வேண்டும்.

"விவசாயம் மற்றும் தொழில் துறை வளர்ச்சியில் காடுகள் முக்கியமான பங்கு வகிக்கின்றன. காடுகளிலிருந்து பல பொருள்கள் கிடைக்கின்றன. வெள்ளங்களைத் தடுப்பதிலும், நீரைத் தேக்குவதிலும், பருவ நிலைகளைச் சீர்மைப்படுத்துவதிலும் காடுகள் மிகவும் பயன்படுகின்றன. நீர்த் தேக்கங்களில் உள்ள நீர் வற்றி, சேறு மிகுந்துவிடாமல் இருக்கவும், அவை துணை செய்கின்றன. காடுகள் குறைந்துவிட்டால் ஏராளமான செலவு செய்து கட்டப்பட்டுள்ள நீர்த் தேக்கங்கள் என்ன ஆகும்?

"விவசாயத்தைப்போலவே, வன வளத்தையும் கருத வேண்டும். நடப்பு ஆண்டில் ரூ. 17 கோடி மதிப்புள்ள வளர்ச்சிப் பணி முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நான்காவது திட்டத்தில் ஆண்டொன்றுக்கு ரூ. 30 கோடி விடுமுதலுக்கு அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது."

காடுகள் பற்றிய ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் டி.என் ஸ்ரீவஸ்தவா துவக்கத்தில் அமைச்சரை வரவேற்றார்.

இக்கல்லூரியில் கொழும்புத் திட்டம், மற்றும் இதர உதவித் திட்டங்களின் கீழ் இலங்கை, தாய்லாந்து, சீர்ராலியோன், ஆப்கனிஸ்தான் முதலிய அண்டை நாடுகளின் மாணவர்களும் பயிற்சியளிக்கப்படுகிறார்கள் என்று அவர் கூறினார்.

மார்புச் சளி நோய்க்குப் புதிய மருந்து!

இலண்டன், நவ. 1—

இரண்டரை ஆண்டுத் தீவிர ஆராய்ச்சிக்குப் பிறகு எல்லா வகை நோய்க் கிருமிகளையும் அழித்தொழிக்கும் அரிய மருந்து ஒன்றை பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்று கண்டுபிடித்துள்ளது. குறிப்பாக, பிராங்கைடிஸ் என்ற மார்புச் சளி நோய்க்கு நல்ல சக்தி வாய்ந்த மருந்து இது.

'செப்ட்ரின்' என்ற இந்த சக்தி வாய்ந்த புதிய மாத்திரைகள் நோய்க் கிருமிகளைக் கொல்வதுடன், மேற்கொண்டு கிருமி உற்பத்தி ஏற்படாதவாறு தடுக்கிறது; வேறு எந்த விளைவுகளையும் இந்த மருந்து ஏற்படுத்துவதில்லை; வெவ்வேறு காரணங்களுக்குப் பயன்படும் இருவித இரசாயனப் பொருட்களை ஒரே அளவில் கலந்து இந்த கிருமி நாசினி' தயாரிக்கப்பட்டுள்ளது.

மார்புச் சளியாயினும் அல்லது மூத்திரக் குழாய்ப் பாதையில் உள்ள நோய்களாயினும் சரி ஒரு நாளைக்கு இரு மாத்திரைகள் வீதம் ஐந்தே நாட்கள் உட்கொண்டால் அத்தனைக் கிருமிகளும் அழிந்துவிடும்; நோய் முற்றிலும் நீங்கும்; இதனைச் சோதித்துப் பார்த்து இந்த மருந்தின் தீவிர பலன் குறித்து மனநிறைவு தெரிவித்துள்ளார் இதனைக் கண்டுபிடித்த டாக்டர்.

வியட்நாம் குண்டுவீச்சு நிறுத்தம்!

ஜான்சன் கட்டளை அமுல்

வாஷிங்டன், நவ. 2—

வெள்ளிக்கிழமை காலை 8 மணிமுதல் (இந்திய நேரப்படி மாலை 6-30 மணி) வட வியட்னாம்மீது விமான, கடல், பீரங்கிப் படைகளின் தாக்குதல் முழுவதையும் நிறுத்துமாறு தாம் உத்தரவிட்டுள்ளதாக அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஜான்சன் வியாழக்கிழமை இரவு அறிவித்தார்.

"பாரிஸ் பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள நிகழ்ச்சிகளின் அடிப்படையில்" தாம் இந்த முடிவுக்கு வந்துள்ளதாக, நாடு முழுதும் பரப்பப்பட்ட டெலிவிஷன் நிகழ்ச்சியில் உரை நிகழ்த்துகையில் அவர் தெரிவித்தார்.

"சிறிது காலமாகவே முக்கியப் பிரச்சினைகள் குறித்து வட வியட்நாமியர்களுடன் அடிப்படை உடன்பாடு காண நாம் முயன்று வந்துள்ளோம்; இது குறித்து இந்த வாரம் ஞாயிறு, திங்கட்கிழமைகளில் நமக்கு உறுதி கிடைக்கத் தொடங்கியது" என்றார், ஜான்சன்.

அவர் மேலும் கூறியதாவது:—

"பாரிஸ் பேச்சுக்களின் முறையான கூட்டம் ஒன்று நவம்பர் 6-ம் நாள் நடைபெறும்; இதில் தென் வியட்நாம் அரசுப் பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம்; தேசிய விடுதலை முன்னணியின் (என்.எல்.எப்.) பிரதிநிதிகளும் வருவார்கள் என்று ஹனாய் அரசுப் பிரதிநிதிகள் நமக்குத் தெரிவித்துள்ளார்கள்; அவர்களது வருகை எவ்வகையிலும் விடுதலை முன்னணியை ஒப்புக் கொள்வதாகாது என்று நான் வலியுறுத்துகிறேன்."

குண்டுவீச்சு நின்றது

சைகோன், நவ. 1—

அமெரிக்க விமானங்கள் இன்று இரவு கடைசியாகக் குண்டுகளை வீசின. 'குண்டு வீச்சு நிறுத்தப்படும்' என்ற ஜான்சன் அறிவிப்பு இரவு 9 மணிக்கு (இந்திய நேரம் 6-30 மணி) நடைமுறைக்கு வந்தது.

இந்திரா மகிழ்ச்சி

புதுடில்லி, நவ. 1—

வட வியட்நாமில் குண்டு வீச்சுக்களை நிபந்தனையின்றி நிறுத்துவதென்ற ஜான்சன் முடிவு, "நல்ல செய்தி; சமாதானத்திற்கான பாதையில் முதற்படி" என்று இந்தியத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி கூறினார்.

"ஜான்சன் விவேகமாகவும், தைரியமாகவும் நடவடிக்கை எடுத்திருக்கிறார்; அவருக்கு எம் பாராட்டுகள்; நீண்ட நாட்களாக எதிர்பார்த்த இந்த நம்பிக்கையான நிலவரத்துக்கு உதவிய எல்லோருக்கும் நமது நன்றி உரித்தாகுக; வியட்நாமில் சமாதானத்திற்கான முதற்படி இது" என்று இந்திரா காந்தி கூறினார்.

ஐ. நா. வரவேற்பு

ஜான்சனின் அறிவிப்பை ஐ நா. வட்டாரங்கள் மனதார வரவேற்றன.

ஜான்சன் அறிவிப்பை முன்கூட்டியே அறிந்த பிரிட்டிஷ் அரசு வட்டாரங்களும் பாராட்டின; ஆயினும் இதை, ஹனாய் எவ்விதம் பிரதிபலிக்கிறதென்பதை ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்.

கடலூரில் 'அண்ணா அங்காடி'

கடலூர், அக். 31—

கடலூர் மஞ்சை நகரில் நகராட்சி மன்றம் புதிதாகக் கட்டியுள்ள அங்காடிக்கு (மார்க்கெட்) அறிஞர் அண்ணா அங்காடி எனப் பெயரிட நகராட்சி மன்றம் முடிவு செய்துள்ளது.

இந்த அங்காடியைத் திறந்து வைக்க ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங்கையும், விழாவுக்குத் தலைமை வகிக்க உள்ளாட்சி அமைச்சர் திரு. மா. முத்துசாமியையும் அழைக்க நகராட்சி மன்றம் முடிவு செய்துள்ளது.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

3-11-68

எண்ணூர்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு, கத்திவாக்கம் கடைத் தெருவில் தலைவர்: வே. நரசிங்கம்; பேசுவோர்: பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ., மைனர் மோசஸ் எம்.சி., ஜி. இலட்சுமிபதி எம்.சி., சி. வி. சிட்டிபாபு எம்.சி., இ. வி. சேது, மற்றும் பலர்.

சேலம்

25-வது வட்ட தி. மு. க. மற்றும் எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 6-30 மணிக்கு, அம்மாபேட்டை பீரண எல்லப்ப செட்டி தெருவில்; தலைவர்: பி. வி. செல்லையா; பேசுவோர்: ஆ. திராவிடமணி, ஆர். எஸ். மணி, கே. செயராமன், சி. பழனியப்பன், கே. எஸ். மாணிக்கம், எஸ். சித்தலிங்கம், திருமால், ஆர். சின்னையன், எஸ். ஆறுமுகம்.

அறிஞர் அண்ணா பெயரில் கல்லூரி

சென்னை, நவ. 1—

நாமக்கல் அரசினர் கலைக் கல்லூரிக்கு 'அறிஞர் அண்ணா கலைக் கல்லூரி' எனப் பெயர் சூட்டத் தமிழக அரசின் அனுமதி கிடைத்துவிட்டதாகச் செய்தியொன்று கூறுகிறது.

செய்த தவறுக்குத் தண்டனை ஏற்பீரா?

சுப்பிரமணியத்துக்கு அமைச்சர் கருணாநிதி கேள்வி

"மத்திய அரசு அமைச்சர்கள் தேர்தல் நேரத்தில் வந்து பிரச்சாரம் செய்யக்கூடாது என்று கூறும் சுப்பிரமணியம் அவர்களைக் கேட்கிறேன்—

"1967-ம் ஆண்டுத் தேர்தலில் தலைமையமைச்சர் இந்திராகாந்தி தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து தேர்தல் பிரச்சாரம் செய்தாரே, அவர் மத்திய அரசின் தலைமையமைச்சரா அல்லது மராட்டிய மாநிலத்து மாதர் காங்கிரசுத் தலைவரா?

"அப்போது அவர் பிரச்சாரம் செய்த பிரச்சாரக் கூட்டச் செலவைக்கூடத் தமிழ்நாடு காங்கிரசு ஏற்காமலிருந்தது -- அரசாங்கத்திற்குச் செலுத்தாமலிருந்தது என்ற தகவல் சட்டமன்றத்தில் வெளியாகவில்லையா?

"இப்படி, தலைமையமைச்சரையே பொதுத் தேர்தலுக்கு இங்கு கொண்டுவந்தவர்கள், 'தேர்தல் காலத்தில் மத்திய அமைச்சர்கள் வரலாமா - பிரச்சாரம் செய்யலாமா?' என்று கேட்கிறார்கள்!

"இதோ, இன்று திறந்துவைக்கப்படும் நினைவு மன்றத்தின் பெயர் 'பொற்செழியன் நினைவு மன்றம்'.

"இந்தப் பொற்செழியன் 1962-ம் ஆண்டு நடந்த விலைவாசி அறப்போரில் மதுரைச் சிறையில் மாண்டார்.

"இவரது மரணச் செய்தியை அறிஞர் அண்ணா அவர்கள் வேலூர் சிறையில் இருந்தவாறு கேட்டார்; நான் திருச்சி சிறையில் இருந்தபடியே கேட்டேன்.

"இப்படி, 20 ஆயிரம் கழகத் தோழர்களைச் சிறையில் அடைத்துவிட்டு 'இதுதான் சரியான நேரம்; கதவு திறந்து இருக்கிறது; 'ஜாம் ஜாம்' என்று உள்ளே நுழையலாம்' என்று திருச்செங்கோடு இடைத் தேர்தலை நடத்தினார்கள்!

"அந்த இடைத்தேர்தலின்போது டில்லியிலிருந்து ஓர் அமைச்சர் வந்தார்; திருச்செங்கோடு முழுவதும் பிரச்சாரம் செய்தார்; நாள்தோறும் பிரச்சாரம் செய்தார்!

"அவர் யார் தெரியுமா? சாட்சாத் சி. சுப்பிரமணியம்தான் அவர்! டில்லி அமைச்சராக இருந்தபொழுது அவரே தேர்தல் பிரச்சாரத்திற்கு இங்கு வந்தார். அதை அவரே மறந்துவிட்டு, 'மத்திய அமைச்சர்கள் தேர்தல் நேரத்தில் பிரச்சாரம் செய்ய வரலாமா?' என்று கேட்கிறார்.

"நியாயமான கேள்விதான்! அப்படிப் பிரச்சாரம் செய்தவர்களுக்குத் தண்டனை தர வேண்டுமென்றால் முன்பு நடந்த நிகழ்ச்சிகளுக்கும் மதிப்புத் தந்து இப்போதைய தமிழ்நாடு காங்கிரசுத் தலைவருக்கும் தண்டனை தர வேண்டும்! அந்தத் தண்டனையை ஏற்றுக்கொள்வாரா சுப்பிரமணியம்!"

—அமைச்சர் மு. கருணாநிதி

(திருவொற்றியூர் பொற்செழியன் நினைவு மன்றத் திறப்புவிழாவில்)

பார்க்பேர் பொருட்காட்சி-1968-69

எஸ். ஐ. ஏ. ஏ. திடல் --- சென்னை-3.

(மூர் மார்க்கெட் பின்புறம்)

ஆதரவாளர்கள் உடனே இடத்திற்கு விண்ணப்பிக்கவும்

ஸ்டால்கள் கட்டவும், எலெக்ட்ரிக் வேலைகள், ஒலிபெருக்கி அமைப்பு முதலிய உரிமைகளுக்கு 15—11—68-க்குள் டெண்டர்கள் கோரப்படுகின்றன.

சிற்றுண்டிசாலை நடத்துதல், சைக்கிள் ஸ்டாண்ட் அமைத்தல், குளிர்க்க பானம், சோடா கலர், ஐஸ்கிரீம், வெற்றிலை பாக்கு, பீடி, சிகரெட் மற்றும் பல விற்பனை முதலியவைகளுக்கு ஏகபோக உரிமை 17—11—68 ஞாயிற்றுக் கிழமை காலை 10-மணிக்குமேல் பொருட்காட்சி அலுவலகத்தில் ஏலம் விடப்படும்.

T.C. & B.C. வேலைகளுக்கு முன்பணம் கட்டக்கூடியவர்கள் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

அசன் அலி

ஆர். புருஷோத்தமன் பி.ஏ.பி.எல்.

கௌரவ காரியதரிசிகள்

கே. கோவிந்தசாமி (முன்னாள் நகரமன்ற உறுப்பினர்) ஆர்கனைசர்

சி. சிட்டிபாபு எம்.பி. ஆர்கனைசிங் செகரட்டரி

தொலைபேசி எண்: 37788

கண்ணதாசனுக்குத் தண்டனை

மதுரை முத்து தொடர்ந்த வழக்கில் தீர்ப்பு

மதுரை, நவ. 2—

மதுரை மாவட்ட தி.மு.க. செயலாளர் எஸ். முத்து எம்.எல்.சி. அவர்களால் தொடரப்பட்ட வழக்கில், அவதூறு குற்றஞ்சாட்டப்பட்டிருந்த கண்ணதாசன், ஜெயகாந்தன், இராசரத்தினம் ஆகியோருக்கு அபராதம் விதித்து நேற்று தீர்ப்பளிக்கப்பட்டது.

பொதுப்பணி அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்களும், மதுரை முத்து எம்.எல்.சி. அவர்களும் பணம் வாங்கிக்கொண்டு மதுரை கம்பெனி ஒன்றுக்குப் பஸ் பர்மிட் வழங்கியதாகக் கண்ணதாசன் சென்னைக் கூட்டம் ஒன்றில் பேசினார் என, ஜெயகாந்தனை ஆசிரியராகவும், இராசரத்தினத்தை அச்சிடுபவராகவும் கொண்ட 'ஜெய பேரிகை' என்னும் ஏட்டில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

இதை எதிர்த்து மதுரை மாவட்ட மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில், மதுரை எஸ். முத்து ஓர் அவதூறு வழக்குத் தொடுத்தார். கண்ணதாசன், ஜெயகாந்தன், இராசரத்தினம், மதுரையைச் சேர்ந்த பத்திரிகை விற்பனையாளர் சுக்கூர் ஆகியோர்மீது புகார் கொடுத்திருந்தார்.

அதன்மீது பலமுறை விசாரணை நடந்து நேற்று கண்ணதாசன் வாக்குமூலம் வாங்கப்பட்டது.

அப்போது அவர், தாம் பத்திரிகையில் உள்ளபடி பேசவில்லை என்றும் அந்தப் பொருள்படும்படியும் தாம் பேசவில்லை என்றும் கூறினார்.

மதுரை எஸ். முத்து எம்.எல்.சி. அவர்கள் சார்பில் வழக்கறிஞர் தர்மராஜ் சந்தோஷம் எம்.எல்.சி. வாதாடினார்.

முடிவாக நேற்று, நீதிபதி திரு. ஜி. வேலாயுதம் தீர்ப்பளித்தார்.

கண்ணதாசன் கூறியதை நீதிபதி ஏற்கவில்லை—அவர் குற்றவாளி எனத் தீர்மானித்தார்.

முடிவாகக் கண்ணதாசன் ரூ. 300 அபராதம் கட்டவேண்டும்; தவறினால் மூன்று மாதம் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றார்.

ஜெயகாந்தனும், இராசரத்தினமும் தலா ரூ. 200 அபராதம் கட்ட வேண்டும்; தவறினால் இரண்டு மாதம் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிபதி கூறினார்.

பத்திரிகை விற்பனையாளர் சுக்கூர் விடுதலை செய்யப்பட்டார்.

அபராதம் விதிக்கப்பட்ட மூவரும் அதைக் கட்டத் தவணை கேட்டார்கள். நவ. 5 வரை தவணை கொடுக்கப்பட்டது.

அண்ணாவை வரவேற்க வாரீர்

சென்னைச் சீரணியினருக்கு அழைப்பு

"6—11—68 காலை 8-மணி அளவில் சென்னை வர இருக்கும் தமிழக முதல்வர், சீரணி கண்ட செம்மல் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு, மீனம்பாக்கம் விமான நிலையத்தில் சென்னை மாவட்டச் சீரணி சார்பில் மகத்தான வரவேற்பளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

"இந்த வரவேற்பில் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பிக்க சென்னைச் சீரணியினர் அனைவரும் சீருடையுடன் காலை 7-மணிக்கே மீனம்பாக்கம் விமான நிலையம் வரவேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்"

என்று சீரணித் தலைவர் நீலநாராயணனும், சீரணி அதிகாரி பரமசாமியும் அழைப்பு விடுத்துள்ளனர்.

பத்தினிக் கோட்டக் கால்கோள் விழா

நற்புங்கரசி கண்ணகி வாழ்ந்த காவிரிப்பூம் பட்டினத்தில் பத்தினிக் கோட்டக் கால்கோள் விழா, 4—11—68 மாலை திரு. ம. பொ. சிவஞானம் தலைமையில் நடைபெறும்; பொதுப்பணி அமைச்சர் திரு. மு. கருணாநிதி கால்கோள் விழா ஆற்றுவார்; திரு சா. கணேசன் அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றுவார்.

சென்னை 73வது வட்ட தி.மு.க.

துணை மன்றங்களுக்கு அறிவிப்பு

"சென்னை 73-வது வட்டத்தில் தூண்டிவிடப்பட்ட துரோகச் சக்திகள் கழக வேட்பாளருக்கு எதிரிடையாக இருந்து கழகத்திற்கு மாசு கற்பித்த சில சார்பு மன்றங்கள் மீதும், அவற்றின் நிர்வாகிகள் மீதும் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என பலதைத் தெரிவித்துக் கொள்வதுடன், துணை மன்றங்களில் எந்தவித நிகழ்ச்சிகள் நடத்த விரும்பினாலும் கிளைக் கழகச் செயலாளர் அனுமதியின்றி நடத்தலாகாது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்"

என சென்னை 73-வது வட்ட தி. மு. கழகச் செயலாளர் ஜே. எஸ். மணி அறிவிக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சுபிரமணியம் நாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.